# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2017.06.02 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்)

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அவர்களினால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2** - இவ்வாசகம், இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 12ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) ஏனைய தேவைப்பாடுகளுக்கிடையே ஒருபெயரையும் இலக்கத்தையும் கொடுப்பதன்மூலம் ஒவ்வொருவட்டாரத்துக்கும் அடையாளங்காணுதலைவழங்குதலாகும்;அத்துடன்

(ஆ) சட்டத்தின் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒத்திருக்கும் தன்மையை விளைவித்தலாகும்.

**வாசகம் 3** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தேர்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடும் விடயத்தில், ஒரு சுயேச்சைக் குழுவுக்கான வேறு பிரித்துக்காட்டுகின்ற இலக்கத்தை வழங்குதலாகும்.

**வாசகம் 4** - இவ்வாசகம்,முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்ட வாறானபிரிவின் சட்டப்பயனானது,-

(அ) சட்டத்தின் சிங்களமற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகளுக்கிடையே ஒத்திருக்கின்ற தன்மையை விளைவிப்பதாகும்;

(ஆ) நியமனப்பத்திரத்தை இரு பிரதிகளில் தயாரிப்பதற்கான தேவைப்பாட்டை அகற்றுவதாகும்; அத்துடன்

(இ) (i) இளம் வேட்பாளர்களின் நூற்றுவீதத்தை வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையின் முப்பது சதவீதத்துக்கு அதிகரித்தலாகும்; அத்துடன்

(ii) பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய இளம் வேட்பாளர்களின் எண்ணிக்கையை ஒரு வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கு ஆணையாளர் தலைமை யதிபதிக்கு ஏற்பாடுசெய்து கொடுத்தலாகும்.

**வாசகம் 5** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) ஒருவேட்பாளரின் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிக ஆளொருவருக்காகவும் இடப்படவேண்டிய வைப்பை ஐயாயிரம் ரூபாவிலிருந்து இரண்டாயிரத்தைந்நூறுரூபாவுக்குக் குறைத்தலாகும்;

(ஆ) ஒருவேட்பாளரின் சார்பிலும் சுயேச்சைக் குழுவொன்றினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிக ஆளொருவருக்காகவும் இடப்படவேண்டிய வைப்பை இருபதாயிரம் ரூபாவிலிருந்து ஐயாயிரம் ரூபாவுக்குக் குறைத்தலாகும்; அத்துடன்

(இ) சுயேச்சைக் குழுவின் தலைவர் தவிர்ந்த அதிகாரமளிக்கப்பட்ட முகவரை, ஒரு சுயேச்சைக் குழுவின் விடயத்தில் சட்டப்படியான நாணயத்தை வைப்பிலிடுவதனை இயலச் செய்வதாகும்.

**வாசகம் 6** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சட்டத்தின் சிங்களமற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒத்திருக்கின்ற தன்மையை விளைவித்தலாகும்.

***வாசகம் 7*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறான இளம் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை குறைவாக விருக்குமிடத்து, பெயர்நியமனப்பத்திரத்தின் நிராகரிப்புக்காக ஏற்பாடுசெய்தலாகும்.

***வாசகம் 8*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறானபிரிவின் சட்டப்பயனானது,போட்டியின்றிவேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் பல்லுறுப்பினர் வட்டாரமொன்றின் விடயத்தில் வேறோராளைப் பெயர்குறித்துநியமிப்பதற்குத் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் தலைவருக்கும் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவருக்கும் காலவரையறையொன்றைவழங்குதலாகும்.

***வாசகம் 9*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, நியமனப்பத்திரத்தில் இரண்டாவதாக இடப்பட்ட ஆளுக்கு ஒரு வேட்பாளரின் இறப்புக் காரணமாக ஏற்படுகின்ற வெற்றிடத்துக்காக வேறொருவரை பெயர்குறித்து நியமிப்பதற்குக் கொடுக்கப்பட்ட உரிமையை இல்லாமற்செய்தலாகும்.

***வாசகம் 10***- இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறானபிரிவின் சட்டப்பயனானது,-

(அ) சட்டத்தின் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒத்திருக்கின்ற தன்மையை விளைவித்தலாகும்; அத்துடன்

(ஆ) ஏனைய தேவைப்பாடுகளுக்கிடையே "வட்டாரத்தின் பெயரையும் இலக்கத்தையும்" குறித்துரைத்தலாகும்.

***வாசகம் 11*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சட்டத்தின் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒத்திருக்கின்ற தன்மையை விளைவித்தலாகும்.

***வாசகம் 12*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சட்டத்தின் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒத்திருக்கின்ற தன்மையை விளைவித்தலாகும்.

***வாசகம் 13*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சட்டத்தின் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒத்திருக்கின்ற தன்மையை விளைவித்தலாகும்.

***வாசகம் 14*** - இவ்வாசகம்,முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடுகின்ற விடயத்தில், வேறு பிரித்துக்காட்டுகின்ற இலக்கமொன்றை வழங்குதலாகும்.

***வாசகம் 15*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஒருவாக்குச் சீட்டுப்பத்திரத்துக்கான உள்ளீட்டுக்காக ஏற்பாடுசெய்வதற்குப் புதியதொரு பந்தியை இடுதலாகும்.

***வாசகம் 16*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறானபிரிவின் சட்டப்பயனானது,-

(அ) நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அலுவலர்கள், அவர்களுக்குப் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளைப் புரிவதற்கு இயலாதவர்களாக இருக்கின்றனரெனத் தெரிவத்தாட்சி அலுவலர் அபிப்பிராயப்படும் விடயத்தில், வேறொரு வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினரை நியமிப்பதற்குத் தெரிவத்தாட்சிஅலுவலரை இயலச் செய்வதற்கானஏற்பாடுகளைச் செய்தலாகும்; அத்துடன்

(ஆ) நியமிக்கப்பட்டவாக்கெண்ணும் அலுவலர், அவருக்குப் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராக இருக்கின்றாரெனத் தெரிவத்தாட்சிஅலுவலர் அபிப்பிராயப்படும் விடயத்தில், வேறொரு தலைமைவகிக்கும் அலுவலரை அல்லது வேறொரு வாக்கெண்ணும் அலுவலரை நியமிப்பதற்குத் தெரிவத்தாட்சி அலுவலரை இயலச்செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தலாகும்.

***வாசகம் 17*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) வாக்குகளைஎண்ணுவதற்கான இடத்தைமாற்றும் பட்சத்தில் வாக்குகளை எண்ணுவதற்கான புதிய இடத்தைத் தெரிவத்தாட்சி அலுவலர் தீர்மானிப்பதற்கு ஏற்பாடுசெய்தலாகும்;

(ஆ) வாக்குகளைஎண்ணுவதற்கானபுதிய இடத்தையும் நேரத்தையும் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் முகவர்களுக்கும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் அறிவிப்பதற்கு ஏற்பாடுசெய்தலாகும்; அத்துடன்

(இ) மேற்பார்வை செய்கின்ற உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறு புதிய இடம்பற்றியும் வாக்குகளை எண்ணுதல் பற்றியும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் தலைமைவகிக்கும் அலுவலர் வாக்குகள் எண்ணப்படுவதனை நடாத்துவதற்கு ஏற்பாடுசெய்தலாகும்.

***வாசகம் 18*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சட்டத்தின் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒத்திருக்கின்ற தன்மையை விளைவித்தலாகும்.

***வாசகம் 19*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சட்டத்தின் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒத்திருக்கின்ற தன்மையை விளைவித்தலாகும்.

***வாசகம் 20*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, 64 ஆம் பிரிவில் தேவைப்பட்டதற்கு மேலதிகமாக 28(இ) என்னும் ஒழுங்குவிதியின்கீழான வெளிப்படுத்துகையைத் தேவைப்படுத்துதலாகும்.

***வாசகம் 21*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 65ஆ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சட்டத்தின் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒத்திருக்கின்ற தன்மையை விளைவித்தலாகும்.

***வாசகம் 22*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 66அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது , சட்டத்தின் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒத்திருக்கின்ற தன்மையை விளைவித்தலாகும்.

***வாசகம் 23*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) ஓர் உள்ளூர் அதிகாரசபையின் காலப்பகுதியின்போது ஒரு மாநகர முதல்வரின் அல்லது பிரதி மாநகர முதல்வரின் பதவி வறிதாகும் விடயத்தில், அத்தகைய நிகழ்வுகளைத் தெரிவத்தாட்சி அலுவலருக்குஉள்ளூராட்சி ஆணையாளர் அறிவிப்பதற்கு ஏற்பாடு செய்தலாகும்;

(ஆ) அத்தகைய மாநகர முதல்வர் அல்லது பிரதி மாநகர முதல்வர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவராக இருந்தாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரினால் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவரினால் முப்பது நாட்களினுள் அத்தகைய வெற்றிடம் பற்றித் தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தகவல் கொடுப்பதற்கு ஏற்பாடுசெய்தலும், புதிய மாநகர முதல்வரை அல்லது பிரதி மாநகர முதல்வரை வெளிப்படுத்துவதற்குத் தெரிவத்தாட்சி அலுவலரை இயலச்செய்வதற்கானஏற்பாடுகளைச் செய்தலுமாகும்.

(இ) புதியவொரு மாநகர முதல்வரை நியமிப்பதற்குத் தெரிவத்தாட்சி அலுவலர் முற்படுவதற்கு ஏற்பாடுசெய்தலாகும்; அத்துடன்

(ஈ) நிரப்பப்படாதுள்ளதும், இரண்டாவது தடவையாக ஏற்பட்டதுமான மாநகர முதல்வரின் பதவியிலான வெற்றிடம் இக்கட்டளைச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறையின் நியதிகளின்படி நிரப்பப்பட்ட பின்னர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் தமது பதவியிலிருந்து தாமே விலகினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்பாதிருப்பதற்கு ஏற்பாடுசெய்தலாகும்.

***வாசகம் 24***- இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 72அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, "திறக்கின்ற" என்னும் சொல்லுக்குப் பதிலாகத் "தொடங்குகின்ற" என்னும் இடுதலாகும்.

***வாசகம் 25***-இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 81ஆ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, அத்தியாவசியச் சேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தவிர, ஏதேனும் அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்குச் சாதகமாக வாக்காளர்களின்மீது வேறுவகையில் செல்வாக்குச் செலுத்துகின்ற பயனைக் கொண்டிருக்கக்கூடிய பகிரங்க நிறுவனத்திலான ஏதேனும் நியமனத்தைச் செய்யாதிருப்பதற்குஏற்பாடுசெய்தலாகும்.

***வாசகம் 26*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, "அதிகாரமளிக்கப்பட்ட முகவர்", பகிரங்கக் கூட்டுத்தாபனம் மற்றும் "பகிரங்க நிறுவனம்" என்னும் சொல்லமைப்புகளுக்கான புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துதலாகும்.

***வாசகம் 27*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையை நீக்குவதுடன், அதற்குப் பதிலாகப் புதிய அட்டவணையொன்றை இடுதலாகும்.

***வாசகம் 28***- இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஒன்பதாம் அட்டவணையைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது,-

(அ) வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு எழுபத்திரெண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர், மூடுஉறைகள் கிடைக்கப்பெற்றதன்மீது அத்தகைய மூடு உறைகளைஅஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுப் பெட்டியில் தெரிவத்தாட்சி அலுவலர் இடுவதற்கு ஏற்பாடு செய்தலாகும்;

(ஆ) தெரிவத்தாட்சி அலுவலர்கள் மூடு உறைகளைவட்டாரங்களுக்கிணங்கத் தனிவேறாக்குவதற்கு ஏற்பாடுசெய்தலாகும்; அத்துடன்

(இ) வாக்குச்சீட்டுப் பத்திரங்களை எண்ணத் தொடங்குவதற்கு நேர்முன்னர்அஞ்சல் வாக்குச்சீட்டுப் பத்திரங்களை எண்ணமுற்படுவதற்குத் தெரிவத்தாட்சி அலுவலர் வாக்கெண்ணும் அலுவலரைப் பணிப்பதற்குஏற்பாடுசெய்தலாகும்.

ச.வ.ஓ. 35/2015

**(262ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2017ஆம் ஆண்டின் ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

262 ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (262ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 12ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவுக்கான கடைசிக் காப்பு வாசகத்தின் (ii)ஆம் பந்தியில் "பெயர் ஒன்றினாலும் ஆங்கிலத்தில் அகரவரிசை எழுத்தொன்றினாலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பெயர் ஒன்றினாலும் இலக்கமொன்றினாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்-

(அ) "வாக்கெடுப்பு மாவட்டங்களாகப்", "வாக்கெடுப்பு மாவட்டத்துக்கும்", மற்றும் "வாக்கெடுப்பு மாவட்டம்" என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவிற் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக முறையே "வாக்கெடுப்பு மாவட்டங்களாகப்", "வாக்கெடுப்பு மாவட்டத்துக்கும்", மற்றும் "வாக்கெடுப்பு மாவட்டம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) பந்தி (இ)இல் "வாக்கெடுப்பு மாவட்டம்" மற்றும் "அம்மாவட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "வாக்கெடுப்பு மாவட்டம்" மற்றும் "அவ்வாக்கெடுப்பு மாவட்டம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

2 -PL 005221-725 (2017/05)

(3) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவில் ''ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (2ஆ) என்னும் உட்பிரிவில் ''ஒரு வாக்கெடுப்புப் பிரதேசத்தை வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தலானது,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஒரு வாக்கெடுப்புப் பிரதேசத்தை வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தலானது,'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு ''ஒரு தேர்தற் பிரதேசம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் குறித்தொதுக்கப்படும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும், ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் இருக்குமிடத்து ஒரு வேறுபிரித்துக்காட்டும் இலக்கமும் குறித்தொதுக்கப்படும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''இக்கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இக்கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2ஆ) என்னும் உட்பிரிவில் ''நியமனப் பத்திரம் இணைப்பிரதியில் ''பிரதி'' என்ற சொல் தெளிவாக எழுதப்பட்டு இணைப்பிரதியில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்களை நீக்கிவிடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (2ஈ) என்னும் உட்பிரிவில்–

(அ) அப்பிரிவை, அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியாக மீளஇலக்கமிடுவதன்மூலமும்;

(ஆ) மீளஇலக்கமிடப்பட்ட பந்தி (அ)வில், "மொத்த எண்ணிக்கையின் இருபத்தைந்து சதவீதம் பெண்களையும் இளைஞர்களையும் கொண்டிருக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "மொத்த எண்ணிக்கையின் முப்பது சதவீதத்துக்குக் குறையாது இளைஞர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(ஆ) ஆணையாளர், வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம், ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபை தொடர்பிலும் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய இளம் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் குறித்துரைத்தல் வேண்டும். பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய இளம் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை, அவ்வெண்ணிக்கையின் முப்பது சதவீதம் ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருக்கக்கூடிய அத்தகையதாகவிருக்குமிடத்து, அந்த முழுவெண்ணுக்கும் பின்னத்துக்குமான மிகக்கிட்டிய முழுவெண், இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக அந்த முப்பது சதவீதமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(4) அப்பிரிவின் (2உ) என்னும் உட்பிரிவில்,

(அ) "இருபத்தைந்து சதவீதமாக" என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப்பதிலாக "முப்பது சதவீதமாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) "(2ஆ) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "(2ஈ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "இடையே அத்துடன் எவ்விடயத்திலும் பெயர் நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு நேர்முற்போந்த நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல், நியமனப்பத்திரம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இடையே (அத்துடன் எவ்விடயத்திலும் பெயர்நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு நேர்முற்போந்த நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல்) நியமனப்பத்திரம்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் "ஐயாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் "இருபதினாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "சுயேச்சைக் குழுவின் தலைவரால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சுயேச்சைக் குழுவின் தலைவரால் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவு, அப் பிரிவின்(4)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:-

(1) "வட்டாரத்தில்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "வட்டாரத்தில்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "அத்தகைய உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பில்" என்னும் சொற்களுக்குப்பதிலாக "அத்தகைய உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஆஆ) இக்கட்டளைச்சட்டத்தின் 28ஆம் பிரிவின் (2ஈ) என்னும் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டவாறான மொத்த எண்ணிக்கையினரான இளம்வேட்பாளர்களைக் கொண்டிராத; அல்லது".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 36ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(இ) பல்லுறுப்பினர் வட்டாரத்தை அல்லது வட்டாரங்களைக் கொண்டிருக்கும் உள்ளூர் அதிகாரசபையொன்றில், வேட்பாளர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர், பெயர் நியமனத்துக்கான கடைசித் தேதிக்குப்பின்னர் ஒருவாரத்தினுள், அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரை அல்லது சுயேச்சைக்குழுவின் தலைவரை, முறையே அவ்வட்டாரத்துக்கு அல்லது வட்டாரங்களுக்கு இக் கட்டளைச்சட்டத்தின் 8ஆம் பிரிவின்கீழ் தகைமைபெற்ற வேறோர் ஆளை அல்லது ஆட்களைக் கோரிக்கைத் தேதியிலிருந்து மூன்றுவாரங்களினுள் பெயர்குறித்து நியமிக்கும்படி கோருதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து" என்பது முதல் "அந்த ஆள்" என்பது வரையான சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப்பதிலாக "வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து இறந்த அத்தகைய வேட்பாளர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியை அல்லது சுயேச்சைக்குழுவை சேர்ந்திருந்தாரோ அந்த அரசியற்கட்சியின் செயலாளர் அல்லது சுயேச்சைக்குழுவின் குழுத்தலைவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "அப்பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரத்துக்கான தேருநர் நிரலில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அப்பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரத்துக்கான தேருநர் நிரலில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(இ) வட்டாரத்தின் பெயரும் இலக்கமும்;".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "வாக்கெடுப்பு மாவட்டத்திலுமுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வாக்கெடுப்பு மாவட்டத்திலுமுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆம் பிரிவு, "ஏதேனும் வட்டாரத்துக்கான", மற்றும் "ஏதேனும்வட்டாரத்துக்கென" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "ஏதேனும் வட்டாரத்துக்கான" மற்றும் "அவ்வட்டாரத்துக்கென" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "அவ்வட்டாரத்திற்கென" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவ்வட்டாரத்திற்கென" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "சிங்களத்தில் அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டதாக, ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் சுட்டிக்காட்டப்பட்டவாறாக வேட்பாளர்களின் பெயர்களைக் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றையும், அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவிற்கும் குறித்தொதுக் முதன்மைச் சட்டவாக்கத்தின் 45ஆம் பிரிவைத் திருத்துதல்.

கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "அறிவித்தலொன்றையும், அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவிற்கும் குறித்தொதுக் கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும் ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் உள்ளவிடத்து, பெயர்நியமனப்பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறாக அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் குறித்தொதுக்கப்பட்ட வேறுபிரித்துக்காட்டும் இலக்கத்தையும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(அ) தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்களைச் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிங்கள அகரவரிசைப்படி ஒழுங்கு படுத்தப்பட்டதாகக் கொண்டிருத்தல் வேண்டுமென் பதுடன், அத்தகைய ஒவ்வொரு கட்சியினதும் பெயருக்கு எதிராக அத்தகைய ஒவ்வொரு கட்சிக்குமெனக் குறித்தொதுக்கப்பட்ட சின்னத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அதனை உடனடுத்து, சுயேச்சைக் குழுக்கள் எவையேனும் அத்தகைய தேர்தலில் போட்டியிடுமாயின், அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் தனித்தனியே "சுயேச்சைக் குழு" என்ற சொற்களும், வரிசைக்கிரமத்தில் வேறுபடுத்திக்காட்டும் இலக்கமும் எழுதப்பட்டு அத்தகைய குழுவின் வேறுபிரித்துக் காட்டும் இலக்கத்துக்கெதிராக அத்தகைய குழு ஒவ்வொன்றுக்கும் குறித்தொதுக்கப்பட்ட சின்னத்தையும் தருதல் வேண்டும் என்பதுடன் ஒரு வாக்காளர் தமது வாக்கை அளிப்பதற்கென ஒவ்வொரு சின்னத்துக்கும் எதிராக ஒரு வெற்றுக்கூடு இருத்தலும் வேண்டும். ஒரு வாக்காளர் அவரது வாக்கை அதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டினுள் இடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் "பணியாற்றுதலும் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக

''பணியாற்றுதலும் வேண்டும். எவ்வாறாயினும், அந்நிலையத்தின் வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினர் அல்லது அத்தகைய பணியாட்டொகுதியினரின் ஓர் அலுவலர், அத்தகைய பணியாட்டொகுதிக்கு அல்லது அத்தகைய அலுவலருக்குப் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளைப்புரிய இயலாதவராக உள்ளார் அல்லது ஒரு வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினராக அல்லது அத்தகைய பணியாட்டொகுதியினரின் ஓர் அலுவலராக அவரின் கடமைகளைப் புரிவதற்குப் பொருத்தமற்றவர் எனத் தெரிவத்தாட்சி அலுவலர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர், விடயத்துக்கேற்ப, அத்தகைய வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினரின் இடத்துக்கு வேறொரு வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினரை அல்லது அப்பணியாட்டொகுதியினரின் அத்தகைய அலுவலரின் இடத்துக்கு வேறோர் அலுவலரை நியமிக்கலாம்.''.

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், ''தேர்தல்கள் ஆணையாளர்'' என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

''அல்லது ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்துக்கு நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அலுவலர் அவருக்குப் பொறுப்பிக்கப்பட்ட கடமைகளைப் புரிய இயலாதவராக உள்ளாரென அல்லது அவர் ஒரு வாக்கெண்ணும் அலுவலராக அவரது கடமைகளைப்புரிவதற்குப் பொருத்தமற்றவரெனத் தெரிவத்தாட்சி அலுவலர் அபிப்பிராயப்படுவாராயின், அவர் முதற்சொல்லப்பட்ட ஆளின் இடத்தில் வேறு எவரேனும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரை அல்லது ஓர் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரை நியமிக்கலாம்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் ''மேற்பார்வை செய்வதற்குத் தெரிவத்தாட்சி அலுவலரினால்

நியமிக்கப்பட்ட உதவித்தெரிவத்தாட்சி அலுவலருக்கு அத்தகைய நிகழ்வை அறிவித்தல் வேண்டு மென்பதுடன், அத்தகைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்,” என்னும் சொற்களுக்குப் பதிலாக “மேற்பார்வை செய்யும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்மூலம் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அத்தகைய நிகழ்வை அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலர்,” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் “போதிய அறிவித்தல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக “போதிய அறிவித்தல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் தெரிவத்தாட்சி அலுவலருக்கும், அதன்பின்னர்,” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் “உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறாகப் புதிய இடத்தில் வாக்கெண்ணுதலானது,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''புதிய இடம்பற்றித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்பட்டபின்னர், மேற்பார்வை செய்கின்ற உதவித்தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறாகப் புதிய இடத்தில் வாக்கெண்ணுதலானது,” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61ஆம் பிரிவைத் திருத்துதல்.

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் “வட்டாரத்தில்” என்னும் சொல்லுக்குப் பதிலாக “வட்டாரத்தில்” என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத் தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 64ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் "வட்டாரத்துக்குப்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "வட்டாரத்துக்குப்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**20**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "அறுபத்திநான்காம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களைப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறுபத்திநான்காம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களையும் இதற்கான ஒன்பதாம் அட்டவணையின் 28(இ) என்னும் ஒழுங்குவிதியின் கீழான வெளிப்படுத்துகையையும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 65ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**21**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (8)ஆம் உட்பிரிவில் "தெரிவுசெய்வதற்கு உரித்துடையதாகின்றதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தெரிவுசெய்வதற்கு உரித்துடையதாகின்றதோ" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 66அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**22**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "(252ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது "(255ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "(252ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (255ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**23**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்-

(அ) "அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் பதவிக்காலத்தின் போது வெற்றிடமானதாகு

மிடத்து ஆணையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் பதவிக்காலத்தின் போது வெற்றான தாகுமிடத்து, உள்ளூராட்சி ஆணையாளர் அத்தகைய நிகழ்வைத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலர்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) "ஆணையாளருக்கு அதனை முப்பது நாட்களுக்குள் அறிவித்தலும் வேண்டும். அத்தகைய தீர்மானம் கிடைக்கப்பெற்றதன் மீது ஆணையாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தெரிவத்தாட்சி அலுவலருக்கு அதனை முப்பது நாட்களுக்குள் அறிவித்தலும் வேண்டும். அத்தகைய தீர்மானம் கிடைக்கப்பெற்றதன் மீது தெரிவத்தாட்சி அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "ஆணையாளர் ஆகக்கூடுதலான வாக்குகளின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தெரிவத்தாட்சி அலுவலர் ஆகக்கூடுதலான வாக்குகளின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "அத்தகைய வெற்றிடம் அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க நிரப்பப்படுமிடத்தும், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினரே அதன்பின்னர் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பிரிவுகளின்கீழ் மாநகர முதல்வராக அவரது பதவியிலிருந்து விலகுமிடத்தும், அவ்வாறு உருவாக்கப்பட்ட வெற்றிடம் இப்பிரிவின் (2)ஆம்

உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறையைப் பின்பற்றி நிரப்பப்படுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக,"மாநகர முதல்வர் பதவியிலான அத்தகைய வெற்றிடம் இக்கட்டளைச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறையின் நியதிகளின்படி நிரப்பப்படுமிடத்தும், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினரே தமது பதவியிலிருந்து விலகுமிடத்தும், அதன்பின்னர் உருவாக்கப்பட்ட வெற்றிடம் இக்கட்டளைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறையின் நியதிகளுக்கிணங்க நிரப்பப்படுதலாகாது." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 72அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 72அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஆரம்பிக்கப்படுவதற்கு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "தொடங்குவதற்கு" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 81ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின்(அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும்பந்தியை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(அ) (i) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது ஏதேனும் சுயேச்சைக் குழுவுக்குச் சாதகமாக வாக்களிப்பதற்கு வாக்காளர்கள்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற பயனைக் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் பகிரங்க நிறுவனத்திலான நியமனங்கள் எவையும் செய்யப்படுதலாகாது;

(ii) உட்பந்தி (i) இல் எது எவ்வாறிருப்பினும், அவசரமாகவுள்ள எந்த அத்தியாவசியமான சேவைகளைப் பிற்போடுதல் பொதுமக்களின் வழமையான வாழ்க்கையைப் பாதிக்குமோ அல்லது பொதுமக்களுக்குப் பாரதூரமான

இடையூறுகளை அல்லது தீங்கை விளைவிக்குமோ அந்த அத்தியாவசியமான சேவைகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அத்தகைய நிறுவனத்திலான ஏதேனும் நியமனம் செய்யப்படலாம்; அத்துடன்';

முதன்மைச் சட்டவாக்கத்தின் 89ஆம் பிரிவைத் திருத்துதல்.

**26.** இரண்டாயிரத்துப் பன்னிரண்டாமாண்டின் 22ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 89ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) 'அங்கீகரிக்கப்பட்ட சின்னம்' என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"அதிகாரமளிக்கப்பட்ட முகவர்" என்பது, விடயத்துக்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று தொடர்பாக அல்லது சுயேச்சைக் குழுவொன்று தொடர்பாக, விடயத்துக்கேற்ப, அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவிருப்பதற்கு அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரினால் அல்லது அந்தச் சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரினால் எழுத்தில் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டவரும், அவரது அதிகாரவளிப்பு, எந்தத் தேர்தல் இடப்பரப்புத் தொடர்பில் தேர்தல் நடைபெறுகின்றதோ அந்தத் தேர்தல் இடப்பரப்பின் தெரிவத்தாட்சி அலுவலருக்குப் பெயர்நியமனக் காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னர் குறைந்தபட்சம் எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னரேனும் அத்தகைய செயலாளரினால் அல்லது அத்தகைய குழுத்தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவுள்ளவருமான ஆளொருவர் என்று பொருளாகும்;".

(2) "அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பாராளுமன்ற இடாப்பு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங் களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"'பகிரங்கக் கூட்டுத்தாபனம்' என்பது, மானியக் கொடை, கடன் என்றவகையாக அல்லது வேறு வகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்;

"பகிரங்க நிறுவனம்' என்பது, ஓர் அமைச்சை யும், அரசாங்கத் திணைக்களத்தையும், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தையும் ஒரு மாகாண சபையினால் அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தையும், ஓர் உள்ளூர் அதிகார சபையையும், அரசாங்கத்துக்குரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிலையும் அல்லது வேறு பொறுப்புமுயற்சியையும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்டவொரு கம்பெனியில், அரசாங்கம், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை பங்குகளின் ஐம்பது சதவீதத் துக்கு மேற்பட்டவற்றை வைத்திருக்கின்ற அக்கம்பெனியையும் உள்ளடக்கும்;"

முதன்மைச் சட்டவாக்கத்துக் கான முதலாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.

**27**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

**"முதலாம் அட்டவணை** [பிரிவு 28(2)]

**நியமனப்பத்திரப் படிவம்**

............................ மாநகரசபை/நகரசபை/பிரதேசசபை.

அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியொன்றாக/வேட்பாளர்களின் சுயேச்சைக் குழுவொன்றாக உள்ள (சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் .............. ............................ என்பவர் குழுத் தலைவராகவுள்ளார்), ............. .......................................... கட்சி, ............................................... மாநகரசபையின்/நகரசபையின்/பிரதேசசபையின் உறுப்பினர்களினது தேர்தலுக்கான வேட்பாளர்களாகப் பின்வரும் ஆட்களை இத்தால் பெயர்குறித்து நியமிக்கின்றது.

**I– வேட்பாளர்கள்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| வட்டாரத்தின் பெயரும் இலக்கமும் "*" | பெயர் - ஆண்கள் / பெண்கள் (தேசிய அடையாள அட்டையில் அல்லது பிறப்புச் சான்றிதழில் சுட்டிக் காட்டப் பட்டவாறு) | தேசிய அடையாள அட்டை இல. | வதிவிட முகவரி | தொழில் | இளைஞர் வேட்பாளரா அல்லரா என்பது (இ) | வேட்பாளரின் சம்மதத்தைக் குறிப்பிடுகின்ற கையொப்பம் |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

## II– மேலதிக ஆட்கள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பெயர் - ஆண்கள் / பெண்கள் (தேசிய அடையாள அட்டையில் அல்லது பிறப்புச் சான்றிதழில் சுட்டிக் காட்டப் பட்டவாறு) | தேசிய அடையாள அட்டை இல. | வதிவிட முகவரி | தொழில் | இளைஞர் வேட்பாளரா அல்லரா என்பது (இ) | மேலதிக வேட்பாளர்களின் சம்மதத்தைக் குறிப்பிடுகின்ற கையொப்பம் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

இந்நியமனப்பத்திரத்தில் பெயர்கள் காணப்படுகின்ற எல்லா இளைஞர் வேட்பாளர்களும் கட்டளைச்சட்டத்தின் 89ஆம் பிரிவில் விதிக்கப்பட்ட வயதெல்லையினுள் உள்ளானவர்களென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் /சுயேச்சைக் குழுவின் தலைவர்.

பெயர் .................................................

முகவரி ................................................

அலுவலகமுறையான இலச்சினை

அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரான/ சுயேச்சைக் குழுவின் தலைவரான மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ........................ என்பவரினால் எனது முன்னிலையில் 20............. ஆம் ஆண்டு ..................... மாதம் ............... ஆந்நாளாகிய இன்று ............................ இல் கையொப்பமிடப்பட்டது.

....................................................

(சமாதான நீதிவான்/சத்திய ஆணையாளர்)

அலுவலகமுறையான இலச்சினை

முகவரி ......................................

* இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் விடயத்தில் ஒரு நட்சத்திரக் குறியையும் (*) மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் விடயத்தில் இரு நட்சத்திரக்குறிகளையும் (**) இடுவதன்மூலம் அது ஒரு பல்லுறுப்பினர் வட்டாரமாவென்பதைச் சுட்டிக்காட்டவும்."

**பெண் வேட்பாளர்களைத் தெரிந்தனுப்பு வதற்கான நியமனப்பத்திரப் படிவம்** [பிரிவு 28 (2அ)]

தெரிவத்தாட்சி அலுவலர்

................................... சபை

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள்

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 28(2அ) இன்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்கள் பற்றிய நிரல்.

................................................. மாநகர சபை/நகர சபை/பிரதேச சபை.

................................................. மாநகர சபைக்காக/நகர சபைக்காக/ பிரதேச சபைக்காகப் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியாக / சுயேச்சைக் குழுவாக உள்ள ........................................ கட்சியின் செயலாளரென்றமுறையில்/குழுத்தலைவரென்ற முறையில் ....................... ........................................ ஆகிய நான், உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 28 (2அ) இன்கீழ் முன்னுரிமை ஒழுங்குவரிசைக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட பெண் வேட்பாளர்களின் பெயர்கள் பற்றிய நிரலை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

| தொடரில. | பெயர் (தேசிய அடையாள அட்டையில் அல்லது பிறப்புச் சான்றிதழில் சுட்டிக் காட்டப் பட்டவாறு) | தேசிய அடையாள அட்டை இல. | வதிவிட முகவரி | தொழில் | பெண் வேட்பாளர்களின் சம்மதத்தைக் குறிப்பிடுகின்ற கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |
| 7. | | | | | |
| 8. | | | | | |
| 9. | | | | | |
| 10. | | | | | |
| 11. | | | | | |
| 12. | | | | | |
| 13. | | | | | |
| 14. | | | | | |
| 15. | | | | | |

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினது செயலாளரின் / சுயேச்சைக் குழுவினது குழுத்தலைவரின் கையொப்பம்.

பெயர் ....................................................

முகவரி ....................................................

அலுவலகமுறையான இலச்சினை .......................

தேதி: ....................................................

முதன்மைச் சட்டவாக்கத் துக்கான ஒன்பதாம் அட்டவணையைத் திருத்துதல்.

**28.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஒன்பதாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டணையின் 17ஆம் ஒழுங்குவிதியில் "வாக் கெடுப்பு முடிவடைவதற்கு முன்னர்" என்னும் சொற்

களுக்குப் பதிலாக, "வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வட்டணையின் 18ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன்மூலமும்:-

"அஞ்சல் வாக்குச் சீட்டுக்களைக் கொண்டுள்ள மேலுறைகள் வட்டாரங்களின் படி தனிவேறாக்கப் படுதல்.

18. தெரிவத்தாட்சி அலுவலர், திறக்கப்படாத மேலுறைகளை அஞ்சல் வாக்காளர்கள் வாக்குச் சீட்டுப் பெட்டியினுள் இட்டபின்னரும் வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு முன்னரும் எந்நேரத்திலும் அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுப் பெட்டிகளைத் திறந்து அவற்றின்கண் அடங்கியுள்ள ஒவ்வொரு வட்டாரம் தொடர்பிலுமான மேலுறைகளைத் தனிவேறாக்குதல் வேண்டும். மேலுறைகள் வெவ்வேறாக்கப்பட்டவுடன், தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொரு வட்டாரம் தொடர்பிலுமான எல்லா மேலுறைகளையும் அத்தகைய வட்டாரத்துக்காகத் தனிவேறான ஓர் உறையிலிட்டு அதனை இலச்சினையிட்டு வாக்குச்சீட்டுக்களுடனும் வேறு பொருட்களுடனும் சேர்த்து, வாக்கெடுப்புத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று, இயைபான வட்டாரத்துக்கு என நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.";

(3) அவ்வட்டவணையின் 19ஆம் ஒழுங்கு விதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும்:-

"அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை எண்ணுதல்.

19. தெரிவத்தாட்சி அலுவலர், வாக்குச்சீட்டுக்களின் எண்ணுகை தொடங்குவதற்கு உடன் முன்னர், வட்டாரமொன்றுக்காக நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அலுவலரை, அத்தகைய வட்டாரத்துக்கான அஞ்சல் வாக்குச்சீட்டுக்களைக் கொண்டுள்ள இயைபான மேலுறைகளைத் திறந்து அவற்றை எண்ணுவதற்கு முற்படுமாறு செய்வித்தல் வேண்டும்.";

(4) அவ்வட்டவணையின் 20, 21, 22, 23 ஆம் ஒழுங்குவிதிகளையும் 24ஆம் ஒழுங்குவிதியின் (1)ஆம் பந்தியையும் நீக்கிவிடுவதன் மூலமும்;

(5) அவ்வட்டணையின் 28ஆம் ஒழுங்குவிதியின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(இ) ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப்பட்ட வாக்குகள் பற்றி எழுத்திலான வெளிப்படுத்து கையையும்;".

(6) அவ்வட்டவணையின் படிவம் அ இல்-

(அ) "வாக்கெடுப்புப் பிரிவிலும், வாக்கெடுப்பு மாவட்டத்திலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாக்கெடுப்பு மாவட்டத்திலும், வட்டாரத்தின் பெயரிலும் இலக்கத்திலும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) "வாக்கெடுப்புப் பிரிவு எழுத்து:" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாக்கெடுப்பு மாவட்ட இல.:" என்னும் சொற்களை இடு வதன்மூலமும்; அத்துடன்

(இ) "வாக்கெடுப்பு மாவட்ட இல:" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வட்டாரத்தின் பெயரும் இலக்கமும்:" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**29**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*